ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2474/31 - 2026 පෙබරවාරි මස 05 වැනි බ්‍රහස්පතින්දා - 2026.02.05

2474/31 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 05 ஆந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

குறிப்பு இல.: DIK/LAN/02/49.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் கீழ், நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

மாத்தறை மாவட்டம், திக்வெல்ல பிரதேச செயலாளர் பிரிவில் 440C, கொடஉட கிராம அலுவலர் பிரிவின் கொடஉட கிராமத்தில் அமைந்துள்ள, மாத்தறை சிரேஷ்ட நில அளவையாளர் நாயகத்தின் கடஸ்திரல் வரைபடம் 820370 ஆம் இலக்க 03 ஆந் தொகுதி 01 ஆம் பத்திர இலக்க நில அளவைப்படத்தில் காட்டப்பட்டுள்ள கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள காணித் துண்டு.

1. **துண்டு இல. 1**

காணியின் பெயர்: கொபெய்கஹ கொரட்டுவ; விபரம்: வீட்டுத்தோட்டம், நிரந்தரக் கட்டிடம் ஒன்று மற்றும் நீர் தாங்கி ஒன்று உள்ளது; உரிமை கோருவோர்: எப். எச். ஹேமப்பால, டபிள்யூ. கே. சிரீமத்தீ மங்கலிக்கா மற்றும் ஏனைய நபர்கள்; விஸ்தீரணம்: 0.0417 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக



*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

2026 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 06 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு திக்வெல்ல பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும்படியும்,

அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும் அத்தொகை கணிக்கப்பட்ட விதத்தையும் 2026 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 26 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

மதுமத்தீ எம். ரத்நாயக்க,
பிரதேச செயலாளர்,
திக்வெல்ல.

பிரதேச செயலகம்,
திக்வெல்ல,
2026, சனவரி 26.

EOG 02 - 0032